10. தனிநபர் தீர்மானமும் வாக்கெடுப்பும்

நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற 2003 ஆம் ஆண்டு அரசமைப்பு (தொண்ணூற்று ஐந்தாவது திருத்தச்) சட்டமுன்வடிவினால் செய்யக் கருதப்பெற்றுள்ள இந்திய அரசமைப்பின் 368-வது பிரிவின் (2) ஆம் பகுதியின் காப்புரையின் (c) பகுதியின் வரம்பிற்குள் வரும் திருத்தங்களுக்கு இப்பேரவை ஏற்பளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அடுத்து, தனியார் அலுவல். திரு. சந்தானம் அவர்கள் தனித் தீர்மானத்தை முன் மொழியலாம்.*

பிற்பகல் 5-55

திரு. லா. சந்தானம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் தனிநபர் தீர்மானத்தை பேரவை விதி 170 (1)-ன்கீழ் இவ்விதியில் குறிப்பிடப்பட்டுள்ள முன் அறிவிப்புக்கு விளக்கம் அளித்து அவையில் முன்மொழியவும், நிறைவேற்றவும் அனுமதி கோர விரும்புகிறேன்.*

"நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற 2003 ஆம் ஆண்டு அரசமைப்பு (தொண்ணூற்று ஐந்தாவது திருத்தச்) சட்டமுன்வடிவினால் செய்யக் கருதப்பெற்றுள்ள இந்திய அரசமைப்பின் 368-வது பிரிவின் (2) ஆம் பகுதியின், காப்புரையின் (c) பகுதியின் வரம்பிற்குள் வரும் திருத்தங்களுக்கு இப்பேரவை ஏற்பளிக்கிறது"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன். (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. லா. சந்தானம் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், தீர்மானம் தோல்வியுற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS